| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | மதுரை | காலம் : | 11/06/2022 | முதல் | 15/06/2022 |
| | அறிக்கை எண் : | 046/ 2022 | வெளியீட்டு நாள் : | 10/06/2022 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34° - 39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (07.06.2022 முதல் 09.06.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 15-06-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07/06 | 08/06 | 09/06 | | தேதி | நாள்-2 11/06 | நாள்-2 12/06 | நாள்-3 13/06 | நாள்-4 14/06 | நாள்-5 15/06 |
| 9.6 | 0.0 | 0.0 | | மழை (மி.மீ) | 12 | 2 | 4 | 0 | 0 |
| 37 | 34 | 39 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 39 | 39 | 38 | 38 |
| 25 | 25 | 26 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 7 | 4 | 4 | | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 6 | 3 | 3 |
| 84 | 61 | 56 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 65 | 65 | 65 |
| 51 | 42 | 50 | | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 10 | 4 | 11 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| வட மேற்கு | மேற்கு | தெற்கு | | **காற்றின் திசை** | தென் மேற்கு | தென் மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 11 தேதி மிதமான மழையும், 13 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 38° - 39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 கி.மீ வேகத்தில், தென்மேற்கு, வடமேற்கு மற்றும் மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 11 ம் தேதி இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள், இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சி மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கும் படியும், விளை நிலங்களில் மழை நீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்

**அடுத்த ஐந்து வாரத்திற்கான விரிவாக்கப்பட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (10 - 16 ஜுன் 2022) :**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட குறைந்த அளவு மழைப் பொழிவு காணப்படும்.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும்.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பெரும்பாலும் இயல்பை ஒட்டியே காணப்படும்.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 11.06.2022 முதல் 13.06.2022 ம் தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும். இடி மின்னலில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு கழுத்தில் கட்டியுள்ள உலோக மணிகளை அகற்றிவிடவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : நிலக்கடலை, வாழை, கால்நடை.**

**நிலக்கடலை:**

- நிலக்கடலை பயிரில் பூவை தக்க வைத்தல் மற்றும் நெற்று நிரப்புதல் தன்மையை அதிகரிக்க,
- கடலை விதை விதைத்த 35 ம் நாள் மற்றும் 45 ம் நாள் ஒரு எக்டேருக்கு 5 கிலோ நிலக்கடலை ரிச்சினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டு தெளிப்பாக தெளிக்கலாம்.

**வாழை:**

- வாழையில் சாம்பல் சத்து பற்றாக்குறை பரவலாக தென்படுகின்றது.
- இவ்வகை சத்துப் பற்றாக்குறையின் அறிகுறியாக முதிர்ந்த இலைகள், நுனியில் இருந்து வெளுத்தும் இலையின் ஒரங்கள் காய்ந்தும் உள்நோக்கி சுருண்டும் காணப்படும்
- இதனை நிவர்த்தி செய்ய ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கிராம் பொட்டாசியம் குளோரைடை கரைத்து இலைவழியாக 10 நாட்களுக்கொரு முறை அறிகுறிகள் மறையும் வரைத் தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

- வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் நன்கு உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளைப் பாதுகாக்கலாம்.